பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
08 09 2025 6.30
திங்கட்கிழமை மாலை

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

- சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைவார்கள் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

- கல்வி மற்றும் சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

- மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக அஇஅதிமுக குற்றம்சாட்டியுள்ளது.

- ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 12-0 என்ற கோல் கணக்கில் சிங்கப்பூரை வென்று சூப்பர்-4 சுற்றுக்கு முன்னேறியது.

-- இனி விரிவான செய்திகள் –

குடியரசு துணைத் தலைவர் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் திரு சி பி ராதாகிருஷ்ணனும், எதிர்க்கட்சிகளின் சார்பில் திரு சுதர்சன் ரெட்டியும் போட்டியிடுகின்றனர்.

இந்த தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை காலை 10 மணிக்கு தொடங்கி மாலை 5 மணி வரை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் மாலை 6 மணிக்கு வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ளப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

542 மக்களவை உறுப்பினர்களும், 239 மாநிலங்களவை உறுப்பினர்களும் இந்த தேர்தலில் வாக்களிக்க உள்ளனர்.

வெற்றி பெறுவதற்கு 391 வாக்குகள் தேவைப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

குடியரசு துணைத் தலைவர் பதவியை உடல்நலக்குறைவு காரணமாக திரு ஜெக்தீப் தன்கர் கடந்த ஜூலை மாதம் ராஜினாமா செய்ததை அடுத்து இந்த தேர்தல் நடைபெறுகிறது.

>><><><<

மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதற்கான சிறப்பு இயக்கத்தை பிரதமர் வரும் 17 ஆம் தேதி தொடங்கி வைக்கவுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதற்கான அறிவிப்பினை வெளியிட்டுள்ள அவர், நாடுமுழுவதும் 75 ஆயிரம் சுகாதார முகாம்கள் அன்றைய தினம் நடைபெறவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் நல்வாழ்வு மையங்கள், சமுதாயக்கூடங்கள் மற்றும் ஆயுஷ்மான் ஆரோக்கிய நிலையங்களில் இந்த முகாம்கள் நடைபெறும் என்றும் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

>><><><<

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் மூலம் அனைத்துத் தரப்பினரும் பயனடைவார்கள் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

நாளிதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர், பற்பசை தொடங்கி கார் வரை எந்த பொருள் வாங்கினாலும் வரிக்குறைப்பு சலுகை கிடைக்கும் என்று கூறினார்.

சரக்கு மற்றும் சேவை வரி செயல்பாட்டிற்கு வந்த பின்னர் தொடர்ந்து சீரமைக்கப்பட்டு வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மாநில அரசுகள் ஒத்துழைப்பு அளித்தது பாராட்டுதலுக்குரியது என்று அவர் தெரிவித்தார்.

இதற்காக மாநில நிதியமைச்சர்களுக்கு நன்றி தெரிவித்து தாம் கடிதம் எழுதியிருப்பதாகவும் அவர் கூறினார்.

*தற்போதைய சீர்திருத்தங்கள் இந்த வரி விதிப்பு முறையை மேலும் எளிமையாக்கி இருப்பதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.*

*இதற்கிடையே, இந்த சீர்திருத்த நடவடிக்கைகள் தொழில்துறையினருக்கு வரப்பிரசாதமாகும் என்று திருப்பூரைச் சேர்ந்த ஆயத்த ஆடை உற்பத்தியாளர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்*

*(சவுண்ட் பைட் – உற்பத்தியாளர் – 44 செகண்ட்ஸ்)*

*இந்த வரி சீர்திருத்தங்கள் மூலம் மக்கள் பெரிதும் பயனடைவார்கள் என்று திருப்பூரைச் சேர்ந்த தொழில் முனைவோர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – தொழில் முனைவோர் – 42 செகண்ட்ஸ்)*

*>><><><><<*

*கல்வி மற்றும் சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு திமுக அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் கூறியுள்ளார்.*

*சென்னை சைதாப்பேட்டை அரசு மருத்துவமனை கட்டிடத்தை இன்று திறந்து வைத்து அவர் பேசினார்.*

*திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் சுகாதாரத் துறையின் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.*

*இன்னுயிர் காப்போம் திட்டத்தின் மூலம் சாலை விபத்துகளில் சிக்கிய 4 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் கூறினார்.*

*>><><><><<*

*திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் நாளை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் தலைமையில் காணொலி வாயிலாக இக்கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*>><><><><<*

ஒரு குடும்பத்தின் நலனுக்காக மட்டுமே திமுக பணியாற்றி வருவதாக அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளராக திரு எடப்பாடி பழனிசாமியை மத்திய அமைச்சர் திரு அமித் □ா-தான் அறிவித்ததாக பிஜேபி மாநில தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

இன்று நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், திரு அமித் □ாவின் வழிகாட்டுதலின் படியே தாம் செயல்பட்டு வருவதாகவும் கூறினார்.

இந்த தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றி பெறும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

>><><><<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன் – 49 செகண்ட்ஸ்)*

>><><><<

<u>மாவட்டச் செய்திகள்</u>

கன்னியாகுமரி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி அழகு மீனா இன்று வழங்கினார்.

-------------

செங்கல்பட்டு மாவட்டம் கடப்பாக்கம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இயற்கை உரம் தயாரிப்பது குறித்த பயிற்சி வழங்கப்பட்டது.

-------------

விருதுநகர் மாவட்டத்தில் கண்தான விழிப்புணர்வு பேரணியை காவல்துறை கண்காணிப்பாளர் திரு கண்ணன் இன்று தொடங்கி வைத்தார்.

-------------

சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் போதைப்பொருள் விற்பனை செய்த இரண்டு பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>><><><><<

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா 12-0 என்ற கோல் கணக்கில் சிங்கப்பூரை வென்று சூப்பர்-4 சுற்றுக்கு முன்னேறியது.

சீனாவின் Hangzhou -வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் Navneet Kaur மற்றும் Mumtaz Khan ஹாட்ரிக் கோல் அடித்தனர்.

--------------

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி சீனாவின் Ningbo -வில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் Niraj Kumar, Amit Sharma, Ramita Jindal உட்பட 24 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

------------

உஸ்பெகிஸ்தானின் Samarkand -ல் நடைபெற்று வரும் Grand Swiss செஸ் போட்டியின் மகளிர் பிரிவு நான்காவது சுற்று முடிவில் இந்தியாவின் வை□ ாலி தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

--------------

உலக சீனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Yogendra Kumar Jaiswal காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 21-7, 23-21 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் Dieter Eichhorn -ஐ வென்றார்.

--------------

டென்னிஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசை பட்டியலில் இந்தியாவின் யுகி பாம்ரி 22-ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

--------------

ஐசிசியின் கடந்த மாதத்திற்கான சிறந்த ஆட்டக்காரர் விருதுக்கு இந்தியாவின் முகமது சிராஜ், நியூசிலாந்தின் *Matt Henry* மற்றும் வெஸ்ட் இண்டீஸின் *Jayden Seales* ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

*>> End of News <<*